# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1786/3 - 2012 නොවැම්බර් මස 26 වැනි සඳුදා - 2012.11.26

*1786/3 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 26 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்**

*அறிவித்தல்*

**பனிக்கட்டி, வளி ஊட்டப்பட்ட நீர் வகை, பழரசம், ஜாம் உற்பத்தித் தொழில்**

*(136 ஆம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 28 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க பனிக்கட்டி, வளி ஊட்டப்பட்ட நீர் வகை, பழரசம், ஜாம் உற்பத்தி வளிபாதுகாப்புச் சேவைத் தொழிலுக்கான சம்பளச் சபையானது மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 30 ஆம் பிரிவினால் அதற்களிக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு இதனகத்தேயுள்ள அட்டவணையிற் தரப்பட்டுள்ள முறையில் அவ்வட்டவணையிற் குறித்துரைக்கப்பட்டவாறான சபையின் அத்தகைய தீர்மானங்கள் மாற்றுவதற்கு, உத்தேசிக்கின்றதென இத்தால் அறிவிக்கின்றது.*

*மேற்கூறப்பட்ட உத்தேசத்திற்கான ஆட்சேபனைகள் 2012 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 19 ஆந் திகதியன்று நண்பகல் 12.00 மணி வரை சபையின் தவிசாளரினால் பெற்றுக்கொள்ளப்படும்.*

*அத்தகைய ஆட்சேபனை ஒவ்வொன்றும் எழுத்தில் செய்யப்படுதலும், அத்தகைய ஆட்சேபனை எந்த ஏதுக்களின் மீது செய்யப்படுகிறதோ அந்த ஏதுக்கள் பற்றிய கூற்றொன்றைக் கொண்டிருத்தலும் வேண்டும்.*

*வி. பி. பி. கே. வீரசிங்க,*
*தலைவர்,*
*பனிக்கட்டி, வளி ஊட்டப்பட்ட நீர்வகை, பழரசம்,*
*ஜாம் உற்பத்தித் தொழிலுக்கான*
*சம்பளச் சபை.*

*தொழில் திணைக்களம்,*
*கொழும்பு 5,*
*2012, ஒற்றோபர் 22.*

**அட்டவணை**

*பனிக்கட்டி, வளியூட்டப்பட்ட நீர் வகை, பழரசம், ஜாம் உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டவையும், 1963 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 27 ஆந் தேதிய 13,535 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவிப்பிற்கான அட்டவணையிற் தரப்பட்டுள்ளவையும் காலத்திற்குக்காலம் வேறுபடுத்தப்பட்டுள்ளவையும், 2010 ஆம் ஆண்டு யூன் 30 ஆந் திகதிய 1664/24 ஆம் இலக்க*

அதிவிசேட வர்த்தமானயில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலின் மூலம் கடைசியாக வேறுபடுத்தப்பட்டுள்ளவையுமான முடிபுகள், அவ்வட்டவணையின் II ஆம் பாகத்திற்குப் பதிலாக பின்வரும் புதிய பாகத்தினை இடுவதன் மூலம் மேலும் வேறுபடுத்தப்படுதல் வேண்டும்:-

**பாகம் II**

*நிரல் I*

**வேலையாளர்களின் வகுப்பு**

**தரம் I**

பிரதான ஐஸ்கிறீம், பழரசம், ஜாம் தயாரிப்போர் (இயற்கையானதும் செயற்கையானதுமான சாறினை இட்டு) கங்காணிமார், தலைமைப் பாணி தயாரிப்போர், நீர் வடித்தற் பொறித் தொகுதி இயக்குநர்கள், தகரப்புட்டி ஆக்குநர்கள், தச்சர், நிரப்புநர் (தன்னியக்க), செவ்வை பார்ப்போர்.

**தரம் II**

உதவி ஐஸ்கிறீம்/பழரசம், ஜாம் தயாரிப்போர் (இயற்கையானதும் செயற்கையானதுமான சாறினை இட்டு) இத் தொழிலுக்குரிய பொருட்களை உற்பத்தி செய்வதில் ஈடுபட்டுள்ள வேறு தொழிலாளர்கள், தகரப்புட்டி பழுதுபார்ப்போர், கார்பன்டை ஒக்சைட் வாயுக் கட்டுப்பாட்டாளர்கள், உதவி பாணி தயாரிப்போர், பணியாளர்கள், மூடியிடுநர், போத்தல் துப்புரவு பரிசோதகர்கள், கார்பனேட்டர் இயக்குநர்கள், உற்பத்தி எண்ணுவோர், நிரப்புநர் (கையால்), கட்டுத் துண்டிடுவோர் (தன்னியக்க), போத்தல் கழுவுநர், கனிப்பொருள் அல்லது வளியூட்டப்பட்ட நீர் வகை உற்பத்தியின் தன்னியக்க எந்திரங்களில் ஈடுபட்டுள்ள வேறெவரேனும் வேலையாளர்கள், பனிக்கட்டி அறுப்போர்.

**தரம் III**

ஐஸ்கிறீம், பழரசம், ஜாம் புட்டிகளில் நிரப்புநர், ஐஸ்கிறீம், பழரசம், ஜாம் களஞ்சியப்படுத்துநர், பனிக்கட்டி களஞ்சியப்படுத்துநர், பனிக்கட்டி பொதியிடுவோர், பனிக்கட்டி ஏற்றுநர் பாணியறைத் தொழிலாளர்கள், போத்தல் பொதி அவிழ்ப்போர், போத்தல் பிரித்து வைப்போர் அல்லது சுத்திகரிப்போர், போத்தல் கழுவி ஏற்றுவோர், பெட்டி நிரப்புநர், போத்தல் பொதியிடுவோர், சுத்திகரிப்போர் அல்லது பெருக்குவோர், போத்தல் கையால் சுத்திகரிப்போர் பெட்டி காவுநர் அல்லது அடுக்குநர், பண்டகசாலைத் தொழிலாளர்கள், கட்டுத் துண்டிடுவோர் (கையால்) வாகனத்தில் ஏற்றுவோர்.

**ஒரு மாதத்திற்கு கொடுக்க வேண்டிய ஆகக் குறைந்த சம்பள வீதம்**

| ஊழிய ஆண்டு | தரம் I<br>ரூ. ச. | தரம் II<br>ரூ. ச. | தரம் III<br>ரூ. ச. |
|---|---|---|---|
| 1 ஆம் ஆண்டு | 10,125.00 | 9,720.00 | 9,315.00 |
| 2 ஆம் ஆண்டு | 10,275.00 | 9,845.00 | 9,415.00 |
| 3 ஆம் ஆண்டு | 10,425.00 | 9,970.00 | 9,515.00 |
| 4 ஆம் ஆண்டு | 10,575.00 | 10,095.00 | 9,615.00 |
| 5 ஆம் ஆண்டு | 10,725.00 | 10,220.00 | 9,715.00 |
| 6 ஆம் ஆண்டு | 10,875.00 | 10,345.00 | 9,815.00 |
| 7 ஆம் ஆண்டு | 11,025.00 | 10,470.00 | 9,915.00 |
| 8 ஆம் ஆண்டு | 11,175.00 | 10,595.00 | 10,015.00 |
| 9 ஆம் ஆண்டு | 11,325.00 | 10,720.00 | 10,115.00 |
| 10 ஆம் ஆண்டு | 11,475.00 | 10,845.00 | 10,215.00 |
| 11 ஆம் ஆண்டு | 11,625.00 | 10,970.00 | 10,315.00 |
| 12 ஆம் ஆண்டு | 11,775.00 | 11,095.00 | 10,415.00 |
| 13 ஆம் ஆண்டு | 11,925.00 | 11,220.00 | 10,515.00 |
| 14 ஆம் ஆண்டு | 12,075.00 | 11,345.00 | 10,615.00 |
| 15 ஆம் ஆண்டு | 12,225.00 | 11,470.00 | 10,715.00 |
| 16 ஆம் ஆண்டு | 12,375.00 | 11,595.00 | 10,815.00 |
| 17 ஆம் ஆண்டு | 12,525.00 | 11,720.00 | 10,915.00 |
| 18 ஆம் ஆண்டு | 12,675.00 | 11,845.00 | 11,015.00 |
| 19 ஆம் ஆண்டு | 12,825.00 | 11,970.00 | 11,115.00 |
| 20 ஆம் ஆண்டு | 12,975.00 | 12,095.00 | 11,215.00 |
| 21 ஆம் ஆண்டு | 13,125.00 | 12,220.00 | 11,315.00 |
| 22 ஆம் ஆண்டு | 13,275.00 | 12,345.00 | 11,415.00 |
| 23 ஆம் ஆண்டு | 13,425.00 | 12,470.00 | 11,515.00 |
| 24 ஆம் ஆண்டு | 13,575.00 | 12,595.00 | 11,615 .00 |
| 25 ஆம் ஆண்டு | 13,725.00 | 12,720.00 | 11,715.00 |

## சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்

அறிவித்தல்

### தும்புமெத்தை, சிலிர்த்த தும்பு ஏற்றுமதித் தொழில்

(136 ஆம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 30 ஆம் பிரிவின்படி தமக்களிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு தும்புமெத்தை, சிலிர்த்த தும்பு ஏற்றுமதித் தொழிலுக்கான சம்பளச் சபையானது, இதனகத்தேயுள்ள அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறாக சபையின் முடிபுகளை வேறுபடுத்த உத்தேசிக்கின்றதென மேற்கூறிய கட்டளைச் சட்டத்தின் 28 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய இத்தால் அறிவிக்கின்றது.

மேற்கூறிய உத்தேசத்திற்கான ஆட்சேபனைகள் 2012 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 19 ஆந் திகதி நண்பகல் 12.00 மணி வரை சபையின் தலைவரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.

அத்தகைய ஆட்சேபனைகள் ஒவ்வொன்றும் எழுத்தில் தெரிவிக்கப்படுவதோடு அவ்வண்ணம் ஆட்சேபிப்பதற்கான காரணங்களைக் காட்டும் கூற்றொன்றைக் கொண்டதாயும் இருத்தல் வேண்டும்.

வி. பி. பி. கே. வீரசிங்க,
தலைவர்,
தும்பு மெத்தை, சிலிர்த்த தும்பு ஏற்றுமதித்
தொழிலுக்கான சம்பளச் சபை.

தொழில் திணைக்களம்,
கொழும்பு 5,
2012, ஒற்றோபர் 18.

### அட்டவணை

தும்பு மெத்தை, சிலிர்த்த தும்பு ஏற்றுமதித் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டு, 1962 ஆம் ஆண்டு யூன் மாதம் 29 ஆந் தேதிய 13187 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவிப்புக்கான அட்டவணையிற் தரப்பட்டுள்ளவையும், காலத்திற்குக் காலம் வேறுபடுத்தப்பட்டவையும், 2010 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆந் திகதிய 1660/35 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவிப்பின் மூலம் கடைசியாக வேறுபடுத்தப்பட்டவையுமான முடிபுகள் அவ்வட்டவணையின் II ஆம் III ஆம் பாகங்களின் பகுதிகளுக்குப் பதிலாக பின்வரும் புதிய பகுதிகளை பதிலீடு செய்வதன் மூலம் மேலும் வேறுபடுத்தப்படுதல் வேண்டும் :-

### II ஆம் பாகம்

#### துண்டு வேலைக்கான சம்பள வீதங்கள்

1. சிலிர்த்த தும்பைக் கையால் அரைகுறையாக அல்லது முற்றிலும் சிக்குவாங்குதலும் (அதாவது ஏற்றுமதிக்காக ஒழுங்குபடுத்துதல்) தரப்புரிகளாகக் கட்டுதலும்.

2. சாயமூட்டுவதற்குத் தயாரிக்கும் பொருட்டு புரியாகக் கட்டாது, கையால் அரைகுறையாக அல்லது முற்றிலும் சிக்குவாங்குதல் (அதாவது ஏற்றுமதிக்காக ஒழுங்குபடுத்துதல்).

3. சாயமூட்டிய சிலிர்த்த தும்பைக் கையால் அரைகுறையாக அல்லது முற்றிலும் சிக்குவாங்குதலும் (அதாவது ஏற்றுமதிக்காக ஒழுங்குபடுத்துதல்) தரப்புரிகளாகக் கட்டுதலும்.

| ஊழிய ஆண்டு | 3 ஆம் கட்டுத்தரம் 100 கி. கிராமுக்கு ரூ. ச. | 2 ஆம் கட்டுத்தரம் 100 கி. கிராமுக்கு ரூ. ச. | சாயமூட்டலுக்காக சிக்கு வாங்குதல் 100 கி. கிராமுக்கு ரூ. ச. | 3 ஆம் கட்டுத்தரம் சாயமூட்டல் 100 கி. கிராமுக்கு ரூ. ச. | 2 ஆம் கட்டுத்தரம் சாயமூட்டல் 100 கி. கிராமுக்கு ரூ. ச. |
|---|---|---|---|---|---|
| 1 ஆம் ஆண்டு | 1,360.75 | 1,350.00 | 907.20 | 1,521.25 | 1,501.75 |
| 2 ஆம் ஆண்டு | 1,367.25 | 1,355.80 | 957.20 | 1,527.05 | 1,507.55 |
| 3 ஆம் ஆண்டு | 1,373.75 | 1,361.60 | 1,007.20 | 1,532.85 | 1,513.35 |
| 4 ஆம் ஆண்டு | 1,380.25 | 1,367.40 | 1,057.20 | 1,538.65 | 1,519.15 |
| 5 ஆம் ஆண்டு | 1,386.75 | 1,373.20 | 1,107.20 | 1,544.45 | 1,524.95 |
| 6 ஆம் ஆண்டு | 1,393.25 | 1,379.00 | 1,157.20 | 1,550.25 | 1,530.75 |

ml;ltiz (njhlu;r;rp)

| ஊழிய ஆண்டு | 3 ஆம் கட்டுத்தரம் 100 கி. கிராமுக்கு ரூ. ச. | 2 ஆம் கட்டுத்தரம் 100 கி. கிராமுக்கு ரூ. ச. | சாயமூட்டலுக்காக சிக்கு வாங்குதல் 100 கி. கிராமுக்கு ரூ. ச. | 3 ஆம் கட்டுத்தரம் சாயமூட்டல் 100 கி. கிராமுக்கு ரூ. ச. | 2 ஆம் கட்டுத்தரம் சாயமூட்டல் 100 கி. கிராமுக்கு ரூ. ச. |
|---|---|---|---|---|---|
| 7 ஆம் ஆண்டு | 1,399.75 | 1,384.80 | 1,207.20 | 1,556.05 | 1,536.55 |
| 8 ஆம் ஆண்டு | 1,406.25 | 1,390.60 | 1,257.20 | 1,561.85 | 1,542.35 |
| 9 ஆம் ஆண்டு | 1,412.75 | 1,396.40 | 1,307.20 | 1,567.65 | 1,548.15 |
| 10 ஆம் ஆண்டு | 1,419.25 | 1,402.20 | 1,357.20 | 1,573.45 | 1,553.95 |
| 11 ஆம் ஆண்டு | 1,425.75 | 1,408.00 | 1,407.20 | 1,579.25 | 1,559.75 |
| 12 ஆம் ஆண்டு | 1,432.25 | 1,413.80 | 1,457.20 | 1,585.05 | 1,565.55 |
| 13 ஆம் ஆண்டு | 1,438.75 | 1,419.60 | 1,507.20 | 1,590.85 | 1,571.35 |
| 14 ஆம் ஆண்டு | 1,445.25 | 1,425.40 | 1,557.20 | 1,596.65 | 1,577.15 |
| 15 ஆம் ஆண்டு | 1,451.75 | 1,431.20 | 1,607.20 | 1,602.45 | 1,582.95 |
| 16 ஆம் ஆண்டு | 1,458.25 | 1,437.00 | 1,65720 | 1,608.25 | 1,588.75 |
| 17 ஆம் ஆண்டு | 1,464.75 | 1,442.80 | 1,707.20 | 1,614.05 | 1,594.55 |
| 18 ஆம் ஆண்டு | 1,471.25 | 1,448.60 | 1,757.20 | 1,619.85 | 1,600.35 |
| 19 ஆம் ஆண்டு | 1,477.75 | 1,454.40 | 1,807.20 | 1,625.65 | 1,606.15 |
| 20 ஆம் ஆண்டு | 1,484.25 | 1,460.20 | 1,857.20 | 1,631.45 | 1,611.95 |
| 21 ஆம் ஆண்டு | 1,490.75 | 1,466.00 | 1,907.20 | 1,637.25 | 1,617.75 |
| 22 ஆம் ஆண்டு | 1,497.25 | 1,471.80 | 1,957.20 | 1,643.05 | 1,623.55 |
| 23 ஆம் ஆண்டு | 1,503.75 | 1,477.60 | 2,007.20 | 1,648.85 | 1,629.35 |
| 24 ஆம் ஆண்டு | 1,510.25 | 1,483.40 | 2,057.20 | 1,654.65 | 1,635.15 |
| 25 ஆம் ஆண்டு | 1,516.75 | 1,489.20 | 2,107.20 | 1,660.45 | 1,640.95 |
| 26 ஆம் ஆண்டு | 1,523.25 | 1,495.00 | 2,157.20 | 1,666.25 | 1,646.75 |

## III ஆம் பாகம்

## நேர வேலைக்கான கீழெல்லைச் சம்பளம்

***தொழிலாளர் வகுப்பு***

***தரம்* II**

பின்வருவனவற்றில் ஈடுபட்டுள்ள தொழிலாளர் - தும்பை லொறிகளிலிருந்து அல்லது வண்டிகளிலிருந்து பண்டகசாலைகளுள் ஏற்றுக்கொள்ளுதல், சிப்பங்களையும் கட்டுக்களையும் கணக்கிடல், சிப்பங்களையும் கட்டுக்களையும் நிறுத்தல், தும்பைத் தரம்பிரித்தல், சிப்பங்களையும் கட்டுக்களையும் அடுக்குதல், அடுக்கிய சிப்பங்களையும் கட்டுக்களையும் குலைத்தல், சிப்பங்களையும் கட்டுக்களையும் அவிழ்த்தல் தேவையற்ற பொருள்களை அகற்றலும், தும்பைச் சுத்தம் செய்தலும், சொரியலான தும்பைக் கட்டாக்குதல், சொரியலான தும்பைக் காயவைத்தல், சிப்பங்களையும் கட்டுக்களையும் பண்டகசாலையின் ஒரு பகுதியிலிருந்து வேறொரு பகுதிக்கு அகற்றல், வெட்டிய சிலிர்த்த தும்புப் புரிகளைச் சீர்படுத்துதல், தும்பை முறுக்குதலும் சுமைகளாக்குதலும், திரித்த தும்பைச் சுற்றுதல், சாயமூட்டுவதற்கு விறகு வெட்டுதல், சிக்கு வாங்குவதற்கு எண்ணெய் விநியோகித்தல், கட்டிய சிலிர்த்த தும்புக்கட்டுக்களை வெட்டுதல், பண்டகசாலைகளையும், வடிகால்களையும் பெருக்குதல், கயிற்றுத் தூசிகளையும் குப்பைகளையும் வண்டியில் அகற்றுதல், கயிற்றுத் தூசியையும் குப்பையையும் அகற்றுவதற்காக வாகனங்களிலிடுதல், கயிற்றுத் தூசியை அரித்தல், கயிற்றுத் தூசியையும் குப்பைகளையும் பைகளிலிடுதல், தேனீர் தயாரித்தல், உணவும் தேனீரும் வழங்குதல், தும்பைப் பெட்டிகளில் அடைத்தலிலும் பதப்படுத்தலிலும் உபயோகிக்கப்படும் சில்லறைப் பொருள்களை ஏற்றுக்கொள்ளுதல், கணக்கிடல், நிறுத்தல், குவித்தல், அகற்றுதல், வெட்டுதல், தயாரித்தல், சுமைகளையும் கட்டுக்களையும் பண்டகசாலையிலிருந்து நிறம் நீக்கு சாலைகளிலிருந்து அல்லது உலர்த்தும் தரைகளிலிருந்து சிப்பமாக்கும் அமுக்கிக்கு எடுத்துச் செல்லல், அமுக்கிப் பெட்டியில் அடைப்போருக்குத் தும்பைச் சேர்ப்பித்தல், தும்பு அமுக்கிய பெட்டிகளைத் தள்ளுதற்குத் தள்ளுபொறிகளை இயக்குதல், மூங்கில்களை அரித்தலும், பிளத்தலும், இரும்பு வளையம் வெட்டுதல், தும்புக் கயிறுகளை நீட்டுதல் அமுக்கி மேடை, குழி, சுற்றுப்புறம் ஆகியவற்றைப் பெருக்குதலும், துப்பரவு செய்தலும், சிப்பங்களை சாக்கினால் மூடித்தைத்தல், சுமைகளைக் காகிதத்தினால் அல்லது சாக்கினால் சுற்றுதலும், மூடைகள் யாவையும் கப்பலில் ஏற்றியனுப்பவதற்காக அடையாளமிடுதலும்.

**மத்திய தரம்**

பின்வருவனவற்றில் ஈடுபட்டுள்ள தொழிலாளர் - தும்பைத் தரைமட்டத்திலிருந்து அமுக்கி மேடைக்கு (உயர்ந்த மட்டத்திலிருப்பின்) எறிதல், சுத்தம் செய்யும் இயந்திரங்களுக்கு தும்பூட்டுதல், சுமைகளாக்கும் பெட்டிகளில் தும்பையிட்டுச் சுமைகளாக்குதல், கயிற்றுப்புரியினால் கயிறு திரித்தல், கெந்தகத்தினால் தும்பை வெளிறச் செய்யும் முறை, சிலிர்த்த தும்புப் புரிகளைக் குறிப்பிட்ட நீளங்களுக்கு வெட்டுதலும் தும்புக்குச் சாயமூட்டும் செய்முறையும்.

**தரம் I**

பின்வருவனவற்றில் ஈடுபட்டுள்ள தொழிலாளர் - அமுக்கும் இயந்திரமின்றித் தும்பைப் பெட்டிகளில் அடைத்துச் சிப்பமாக்குதல், சிப்பமாக்கும் அமுக்கியைக் கட்டுப்படுத்தலும் இயக்குதலும், சிப்பத்தை இரும்பு வளையத்தால் அல்லது கயிற்றால் கட்டுதல், சிப்பங்களைக் குவித்தல், கலைத்தல், எடுத்துச் செல்லல், தள்ளுதல், ஏற்றுதல், இறக்குதல், தும்பைத் திரித்தலும், முறுக்குதலும்.

*தொழிலாளர்கள்*

| ஊழிய ஆண்டு | தரம் II<br>ரூ. ச. | மத்திய தரம்<br>ரூ. ச. | தரம் I<br>ரூ. ச. | தலைமைச் சிப்பம் அமுக்கி இயக்குனர்<br>ரூ. ச. |
|---|---|---|---|---|
| 1 ஆம் ஆண்டு | 9,315.00 | 9,720.00 | 10,530.00 | 10,125.00 |
| 2 ஆம் ஆண்டு | 9,415.00 | 9,845.00 | 10,680.00 | 10,300.00 |
| 3 ஆம் ஆண்டு | 9,515.00 | 9,970.00 | 10,830.00 | 10,475.00 |
| 4 ஆம் ஆண்டு | 9,615.00 | 10,095.00 | 10,980.00 | 10,650.00 |
| 5 ஆம் ஆண்டு | 9,715.00 | 10,220.00 | 11,130.00 | 10,825.00 |
| 6 ஆம் ஆண்டு | 9,815.00 | 10,345.00 | 11,280.00 | 11,000.00 |
| 7 ஆம் ஆண்டு | 9,915.00 | 10,470.00 | 11,430.00 | 11,175.00 |
| 8 ஆம் ஆண்டு | 10,015.00 | 10,595.00 | 11,580.00 | 11,350.00 |
| 9 ஆம் ஆண்டு | 10,115.00 | 10,720.00 | 11,730.00 | 11,525.00 |
| 10 ஆம் ஆண்டு | 10,215.00 | 10,845.00 | 11,880.00 | 11,700.00 |
| 11 ஆம் ஆண்டு | 10,315.00 | 10,970.00 | 12,030.00 | 11,875.00 |
| 12 ஆம் ஆண்டு | 10,415.00 | 11,095.00 | 12,180.00 | 12,050.00 |
| 13 ஆம் ஆண்டு | 10,515.00 | 11,220.00 | 12,330.00 | 12,225.00 |
| 14 ஆம் ஆண்டு | 10,615.00 | 11,345.00 | 12,480.00 | 12,400.00 |
| 15 ஆம் ஆண்டு | 10,715.00 | 11,470.00 | 12,630.00 | 12,575.00 |
| 16 ஆம் ஆண்டு | 10,815.00 | 11,595.00 | 12,780.00 | 12,750.00 |
| 17 ஆம் ஆண்டு | 10,915.00 | 11,720.00 | 12,930.00 | 12,925.00 |
| 18 ஆம் ஆண்டு | 11,015.00 | 11,845.00 | 13,080.00 | 13,100.00 |
| 19 ஆம் ஆண்டு | 11,115.00 | 11,970.00 | 13,230.00 | 13,275.00 |
| 20 ஆம் ஆண்டு | 11,215.00 | 12,095.00 | 13,380.00 | 13,450.00 |
| 21 ஆம் ஆண்டு | 11,315.00 | 12,220 00 | 13,530.00 | 13,625.00 |
| 21 ஆம் ஆண்டு | 11,415.00 | 12,345.00 | 13,680.00 | 13,800.00 |
| 23 ஆம் ஆண்டு | 11,515.00 | 12,470.00 | 13,830.00 | 13,975.00 |
| 24 ஆம் ஆண்டு | 11,615.00 | 12,595.00 | 13,980.00 | 14,150.00 |
| 25 ஆம் ஆண்டு | 11,715.00 | 12,720.00 | 14,130.00 | 14,325.00 |
| 26 ஆம் ஆண்டு | 11,815.00 | 12,845.00 | 14,280.00 | 14,500.00 |

*12- 249/2*

## சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்

*அறிவித்தல்*

### தோல் பதனிடுதல், பாதணிகள், தோற்பொருட்கள் உற்பத்தித் தொழில்

*தோல் பதனிடுதல், பாதணிகள், தோற் பொருட்கள் உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபையானது, (136 ஆம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 30 ஆம் பிரிவின்படி அதற்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு, இதனகத்தேயுள்ள அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறான சபையின் முடிபுகளை அவ்வட்டவணையிற் காட்டப்பட்டுள்ளவாறு வேறுபடுத்துவதற்கு உத்தேசிக்கின்றதென அக்கட்டளைச் சட்டத்தின் 28 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய இத்தால் அறிவிக்கின்றது.*

*மேற்கூறப்பட்ட உத்தேசத்திற்கான ஆட்சேபனைகள் 2012 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 19 ஆந் திகதியன்று நண்பகல் 12.00 மணி வரை சபைத் தலைவரினால் பெற்றுக்கொள்ளப்படும்.*

*அத்தகைய ஆட்சேபனை ஒவ்வொன்றும் எழுத்தில் செய்யப்படுதலும் அத்தகைய ஆட்சேபனை எந்த ஏதுக்களின் மீது எடுக்கப்படுகின்றதோ அந்த ஏதுக்கள் பற்றிய கூற்றொன்றைக் கொண்டிருத்தலும் வேண்டும்.*

*வி. பி. பி. கே. வீரசிங்க,*
*தலைவர்,*
*தொழில் பதனிடுதல், பாதணிகள், தோற் பொருட்கள் உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபை.*

*தொழில் திணைக்களம்,*
*கொழும்பு,*
*2012, ஒற்றோபர் 23.*

**அட்டவணை**

*தோல் பதனிடுதல், பாதணிகள், தோற்பொருட்கள் உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்ட, 1970ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 28 ஆந் திகதிய 14921 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலுக்கான அட்டவணையிற் குறிப்பிடப்பட்டவையும், காலத்திற்குக் காலம் வேறுபடுத்தப்பட்டவையும், 2010 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆந் திகதிய 1660/35 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவிப்பின் மூலம் கடைசியாக வேறுபடுத்தப்பட்டவையுமான முடிபுகள் அவ்வட்டவணைக்கு பின்வரும் புதிய பாகத்தினை இடுவதன் மூலம் மேலும் வேறுபடுத்தப்படுதல் வேண்டும் :-*

**பாகம் II**

*தோல்பதனிடுதல், பாதணிகள், தோற்பொருட்கள் உற்பத்தித் தொழிலில் ஈடுபட்டுள்ள பின்வரும் தொழிலாளர் வகுப்புக்களுக்குரிய ஊழியர்களுக்கான நேர வேலைக்குரிய ஆகக் குறைந்த மாதாந்தச் சம்பள அளவு கீழ்க்காணும் விளக்க அட்டவணையில் காட்டப்பட்டுள்ளவாறு அமைதல் வேண்டும்.*

**தொழிலாளர் வகுப்பு** :

*தோல் பதனிடுதல்:*

**தரம் I**
*பதனிடா உரிவையைக் கழுவுதல், உரிவையைச் சுண்ணாம்பில் கொதிக்கவைத்தல், சருமத்திலிருந்து மயிரை அகற்றுதல், சருமத்திலிருந்து சதையை அகற்றுதல், இரசாயனப் பொருட்களிடல், வெளிறச் செய்தல், மென்மையாக்கல், ஊறவைத்தல், உப்பிடல், மேல்மிச்சமான எண்ணெய்யை அகற்றுதல்.*

**தரம் II**
*பிரித்தல், சிவிறுதல், உப்பிட்ட தோல்களை அடுக்குதல், தோலை நேர்த்தியாக்குதலும் தெரிவுசெய்தலும் தரப்படுத்தலும் சேர்வையில் தோய்த்தல், எந்திரங்களை இயக்குதல், சுருக்கு நீக்கி அழுத்தமாக்குதல்.*

**தரம் III**
*மா இட்டுக் காயவைத்தல், பதனிடா உரிவையைப் பதப்படுத்தல், துப்புரவு செய்வோர், கட்டுவோர் ஆகியோரின் வேலை, மேலே குறிப்பிடப்பட்ட வேலை சம்பந்தமாக அல்லது அவ்வேலையின்போது நிகழும் மற்றும் யாதாயினும்*

*பாதணி உற்பத்தியும் பழுதுபார்த்தலும் :*

**தரம் I**

சேர்த்தல், மேற்தோல் செய்தல், புடவை ஒட்டுதல், எந்திரவேலை, மேற்தோல் வெட்டுதல், விளிம்பை நேர்த்தியாக்குதல், அச்சில் மேற்தோல் ஒட்டுதல், அடிப்பாகங்களை அழுத்துதல், குதி செய்தல், குதி அமுக்குதல், மேற்தோல்களின் பாகங்களை வெட்டுதல், விளிம்பு அமைத்தல், அடித்தோல் வெட்டுதல்.

**தரம் II**

ஏற்றுதல், சப்பாத்து அழுத்துதல், மேற்தோல் செய்தல், கச்சு அமைப்பதற்கு துவாரமிடல், தறைதல், வார்ப்பூட்டு இணைத்தல், அடித்தோல் தைத்தல், அடித்தோலை மென்மையாக்கல், மேலதிகப் பாகங்களை அகற்றுதல், கரைசல் தயாரித்தல், மேற்தோலின் முன்புறத்தை அமைத்தல், கல்லறைகளை அமைத்தல்.

**தரம் III**

இறப்பர் சேர்வை கலத்தல், கச்சு வெட்டுதல், மேற்தோலைத் தறைதல், சேர்வையில் தோய்த்தல், மேற்தோல் இடல், மேற்தோல் தயாரித்தல், பின் தையலுக்குச் சேர்வை பூசுதல், மினுக்குதல், செய்துமுடித்தல், பெட்டிகள் வழங்கல், பெட்டிகளுக்கு முத்திரையிடல், பெட்டிகளுக்கு நாமவிலாசமிடல், துப்புரவு செய்வோர், கூட்டுவோர் ஆகியோரின் வேலை, மேலே குறிப்பிடப்பட்ட வேலை சம்பந்தமாக அல்லது அவ்வேலையின்போது நிகழும் மற்றும் செய்கையாதாயினும்

*தோற்பொருட்கள் உற்பத்தி செய்தல்*

**தரம் I**

இயந்திரத்தினாலும் கையாலும் மேற்தோல்களின் பாகங்களை வெட்டுதல், துளையிடலும் பிளவு ஆக்கலும், தறைதல், கையால் அமுக்குதல், காற்பந்துகள், கைப்பந்துகள், வலைப்பந்துகள் செய்தல், பயணப் பைகள், சாதாரண உறைகள், பணப் பைகள் செய்தல் (கையால்)

**தரம் II**

தெறிகள், வார்ப்பூட்டுகள், பொத்தான்கள் அமைத்தல், சித்தரித்தல், பூட்டுக்கள், இணைப்புக்கள், கைப்பிடிகள் அமைத்தல், தைத்தல், பயணப் பைகள் செய்தல் (இயந்திரத்தால்)

**தரம் III**

அடையாளமிடல், சேர்வையும் பசையுமிடல், காற்றுச் செலுத்துதலும் முத்திரையிடலும், மேலே குறிக்கப்பட்ட வேலை சம்பந்தமாக அல்லது வேலையின்போது நிகழும் மற்றும் வேலை யாதாயினும்

***தொழில் பயிலுநர் அல்லது பயிற்சியாளர்***

மேலே கூறப்பட்ட பயிற்சியாளர் அல்லது பயிலுநர் எவரேனும் தொடர்பான பயிற்சிக் காலம் 156 வேலை நாட்களைக் கொண்ட காலப் பகுதியாக அமையுமெனக் கருதப்படல் வேண்டும்.

**விளக்க அட்டவணை**

***ஒரு மாதத்திற்கான ஆகக்குறைந்த சம்பள வீதம்***

| ஊழிய ஆண்டு | தோல் பதனிடுதல், பாதணிகள், தோற்பொருட்கள் உற்பத்தித் தொழில் | | | |
|---|---|---|---|---|
| | தரம் I<br>ரூ. ச. | தரம் II<br>ரூ. ச. | தரம் III<br>ரூ. ச. | தொழில் பயிலுநர் அல்லது பயிற்சியாளர்<br>ரூ. ச. |
| 1 ஆம் ஆண்டு | 10,500.00 | 10,080.00 | 9,660.00 | 5,820.00 |
| 2 ஆம் ஆண்டு | 10,650.00 | 10,205.00 | 9,760.00 | |
| 3 ஆம் ஆண்டு | 10,800.00 | 10,330.00 | 9,860.00 | |
| 4 ஆம் ஆண்டு | 10,950.00 | 10,455.00 | 9,960.00 | |
| 5 ஆம் ஆண்டு | 11,100.00 | 10,580.00 | 10,060.00 | |

12-249/3

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.